# **Chapter - 10 - Speech for 12-February-2022**

இந்த அத்தியாயத்தின் முதல் வாக்கியம் ரூபம் சக்தி ஆகிறது என்று ஆரம்பிக்கிறது. அது வந்தது சத்தில் ஏற்பட்ட ஒரு சலனத்தால். அந்த சலனத்திலும் தன்னை அறிவதால் அது சித்த பூர்வமாக conscious -ஆக இருக்கிறது. அந்த conscious தன்னை உணர்ந்து அனுபவிப்பதற்கு சக்தி உருவாகிறது. அது சித் சக்தி. அது அனுபவிக்கும் அனுபவம்- ஆனந்தம். அதனால் படைப்பில் உள்ள யாவும் சித் சக்தியின் படைப்பே.

அது அசைந்தது, சலனத்தை ஒரு movement ஐ ஏற்படுத்தியது ஒரு ஆனந்தத்திற்காக. அதற்காக ஏற்பட்ட ஒரு ஆற்றல் சித் சக்தி. அது தானே ஆனந்தத்தை அனுபவிக்க முடியும் என்றாலும் - தன்னில் இருந்து பிரிந்து அந்த அனுபவத்தை பார்ப்பதில் அதிக ஆனந்தம் இருப்பதால் , தன்னை போன்ற பிரம்மத்தை உள்ளடக்கிய படைப்புகளை உருவாக்குகிறது. It creates form of itself in creation. இதன் பிறகு வரும் அத்தியாயங்கள் இந்த சித்த பூர்வமாக இருத்தல், பின் சித்தத்தையும் ஏன் இழக்கிறது, எதற்கு இழக்கிறது, அது மீண்டும் எப்படி ஒன்று சேருகிறது என்றெல்லாம் விளக்குகிறார். அதற்கு அடிப்படையாக இந்த அத்தியாயம் அமைகிறது. இதில் சக்தி- ஆற்றல், அது சித்த பூர்வமான சக்தியா, conscious இல்லாத சக்தியா, சுயமாக படைக்கும் திறன் கொண்டதா அல்லது அதுவே பிரம்மத்தின் வெளிப்பாடா, ஏன் இருக்கிறது, எதற்கு இப்படி செய்கிறது என்று சிலவற்றை சென்ற கூடல்களில் பார்த்தோம்.

பொதுவாக நம்மை சுற்றி, அல்லது நமக்குள், அல்லது நமக்கு மேல் என்று ஒரு infinite force - வரையறையற்ற சக்தி ஒன்று இருப்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்கிறோம். அது அனைத்து இயக்கங்களையும் நிகழ்த்திக் கொண்டு வருகிறது என்பதையும் நம்புகிறோம். தன் படைப்பு, தன் அனுபவம் என்று இயங்கும் அந்த சக்தியை, நம் புலன்களால் அறியக்கூடிய வடிவங்கள் மூலமும், சில நேரங்களில் சூட்சமமான அம்சங்களின் மூலமும் உணர்ந்து - அதை இறைவன் என்றோ, இயற்கை என்றோ சொல்லி கடந்து சென்று பழக்கப்பட்டு விட்டோமே தவிர, அது அனைத்து உயிரினத்திலும், உயிரில்லாத பொருட்களிலும் அந்த சக்தி, பேராற்றல் தன் முழுமையுடன் இருக்கிறது என்பதை நாம் உணர்வதில்லை. பிற உயிரினத்திலும், தாவரங்களிலும் இருப்பதாக சில நேரம் ஆராய்ச்சிகளால், விஞ்ஞானத்தின் மேல் உள்ள நம்பிக்கையால் - ஒத்துக் கொள்வோம். ஆனால் உயிரில்லாத ஜட

பொருட்களிலும் அதே அளவு இருக்கிறது என்பதை நம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

நான் இறக்குமதி செய்த அலுமினியப் பொருட்கள் விற்றதை பற்றி சொல்லி இருக்கிறேன். மீண்டும் சுருக்கமாகச் சொல்கிறேன். ஒரு சில அலுமினிய decoration channels -களை இறக்குமதி செய்தேன். அதன் look, finish போன்றவை மிகவும் பிடித்து இருந்ததால், அடிக்கடி அதை பார்த்து தடவி பெருமைப்பட்டுக் கொள்வேன். அவ்வளவு நன்றாக இருந்தும் கூட -அவற்றை விற்க முடியவில்லை. எனக்கு தெரிந்த life response theory எல்லாம் செய்து பார்த்து விட்டு கர்மயோகிக்கு எழுதினேன். அவர் அதன் மேலுள்ள attachment-ஐ எடுத்து விடு, அது விற்று விடும் என்றார். அதன் பிறகு அதை நான் கண்டுகொள்ளவில்லை. ஒரு நாள் சீக்கிரம் இங்கிருந்து ஓடிவிடு என்று கூட சொன்னேன். அத்தனையும் அடுத்த ஒரு வாரத்தில் விற்று விட்டது. இது எதைக் காட்டுகிறது என்றால் நாம் ஜடம், உயிரற்றது என்று நினைப்பவற்றில் கூட ஒரு பிரம்மம், ஒரு consciousness, ஒரு வாழ்வு, ஒரு பிரபஞ்சம் இருக்கிறது என்பது தான். இவற்றையெல்லாம் நாம் கவனிப்பதில்லை, உணர்வதில்லை. இது போன்ற சூட்சுமமான இயக்கங்களை நம்மால் அறிய முடிவதில்லை. அறிய முயற்சிப்பதும் இல்லை. நம்மால் ஒன்றை – ஜடத்தில் அல்லது ஜடம் சார்ந்த புலன்களால், அல்லது அறிவால் அறியக் கூடிய வகையில் வெளிப்படும் போது தான் ஒன்றை அறிய முடியும் என்ற நிலையிலேயே இருக்கிறோம்.

எதுவும் செய்யவில்லை என்றால் கூட, உடல் உறுப்புக்கள் இயங்கிக் கொண்டு இருக்கிறது. தூங்கும் போதும், மயக்கமாக இருக்கும் போதும், கோமா நிலை என்னும் போதும் ஏதோ ஒன்று உள்ளே இயங்கிக் கொண்டு தான் இருக்கிறது. அது எப்படி, அது எந்த சக்தியால் இயங்குகிறது என்பதை பற்றி நம்மால் சிந்திக்க முடிந்தால், இந்த சித் சக்தியை புரிந்துக் கொள்ள முடியும்.

ஒரு மோட்டார் ஓடுகிறது, ரயில் ஓடுகிறது . எப்படி என்று கேட்டால், petrol , diesel , மின்சாரம், engine என்று நமக்குத் தோன்றுவதை, புரிந்ததைச் சொல்கிறோம். ஆனால் நன்றாக சிந்தித்திப் பார்த்தால் , அவையெல்லாம் அவை இயங்குவதற்கான உள்ளீடுகள் . ஆற்றல், energy க்காண அடிப்படை அவை. அதற்கான force எங்கிருந்து வந்தது என்றால் - அதன் எல்லை வரை பகுத்தறிந்து பார்த்தால் - அதன் முடிவில் இருப்பது அதை கண்டு பிடித்தவருடைய சித்தம். அது வெளிப்பட்ட தீவிரம். அதன் மூலம் அவர் அடைய நினைத்த ஆனந்தம். இவற்றை வெளிப்படுத்திய movement and force .

இந்த மோட்டார், என்ஜின், ரயில் என்று அதன் இயக்கத்தில் எந்த மாறுதல்களை நினைத்தாலும் அது அந்த சித்தத்தை ஒட்டியே இருக்க முடியும். மோட்டாரை, தண்டவாளத்தில் ஓட்ட முடியாது. ரயிலை ரோடில் ஓட்ட முடியாது. ஒரு ஆர்வம், ஒரு கருத்து, அது ஏற்படுத்திய சலனம், அது தந்த சக்தி என்பதே எவற்றிற்கும் அடிப்படை. அதை மாற்ற முடியாது. அதற்கு உட்பட்டே ஆக வேண்டும். காரை தண்டவாளத்தில் ஓட்டினாலும், ரயிலை தரையில் ஓட்டினாலும், முரண்பாடே வரும். அது மீண்டும் தன் நிலைகளுக்கு செல்லும் வரை அது படைக்கப்பட்டதற்கான நோக்கத்தை அது நிறைவேற்றாது. அதை நம்மில், மனிதனில் பொருத்திப் பார்த்தால் நமக்கான சித் சக்தி எங்கே இருக்கிறது, அதன் நோக்கம் வெளிப்படாமல் நாம் எப்படி தடுக்கிறோம். மீண்டும் அந்த நிலையை அடையும் வரை, அதன் நோக்கத்தோடு ஒன்றும் வரை, நமக்கு ஆனந்தம் என்பதே இருக்காது என்பது புரியும்.

இந்த விளக்கத்திற்கு வருமுன் - பஞ்சபூதங்கள் எப்படி உருவானது. அதை வைத்து ஐம்புலன்கள் எப்படி உருவானது, அதன் மூலம் மட்டுமே அனுபவம் பெறும் முறைகளுக்கு நாம் ஏன் வந்தோம் போன்றவற்றை விளக்கமாகச் சொல்கிறார். என்னை பொறுத்தவரை அவற்றை எல்லாம் என் வாழ்வில் பொருத்தி பார்த்து - மாற்றுமளவிற்கு இல்லாததால் அவற்றை நான் முக்கியமாக எடுத்துக் கொள்ளவில்லை. விளக்க முற்படவில்லை.

நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், ஒலியால் கேட்கிறோம் , காற்றால் ஸ்பரிசத்தை உணர்கிறோம், ஒளி பார்க்கும் திறனையும், நீர் சுவையையும், நிலம் நுகரும் தன்மையையும் தருகிறது. பிரம்மத்திலிருந்து இவை எல்லாம் எப்படி வந்தது என்பது புரியவில்லை என்றால் கூட பரவாயில்லை. புரிய வேண்டியது என்னவென்றால் பிரம்மத்தில் இருந்து தான் அனைத்தும் வந்தது என்பதை நாம் ஏற்றுக்கொண்டால் அனைத்திலும் அந்த பிரம்மத்தின் வித்து, அதன் ஆற்றல், அதன் ஞானம் இருக்கிறது என்பதை நாம் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். எந்த அளவு மூலத்துடன், ஈடுபாட்டுடன், ஆர்வத்துடன், விழிப்புடன், தொடர்பு கொள்கிறோமோ, அந்த அளவிற்கு அதன் ஞானம் - ஐம் பூதங்களிலும், ஐம்புலன்களிலும் வெளிப்படும். நம்முள் உள்ள Brain மூளையை, அறிவிற்குறிய இடமாகவும், நரம்பு மண்டலத்தை உணர்விற்குறிய இடமாகவும், உடலை, உடல் உறுப்புகளை, ஜடமாகவும் நினைக்கிறோம் . நான் tired ஆக இருக்கிறேன் என்று கூறும் போதும், முட்டி வலிக்கிறது என்று கூறும் போதும், ஏதாவது ஒன்று உணர்வோ, உடலோ தன் நிலையை வெளிப்படுத்துவதாக நினைக்கிறோம். அதுவே உணர்வில் ஏதாவது ஒரு ஆர்வம் அல்லது கவனம் அதிகமாக இருக்கும்போது உடல் வலி தெரிவதில்லை. அந்த இடங்களில் நம்

conscious அதிகமாக இருப்பதால் அப்படி தெரிகிறது. அதற்கான சக்தியை அங்கு அதிகம் செலவிடப்படுவதால் அப்படி தெரிகிறது. ஆனால் அந்த அனுபவத்தை ஆராய்ந்தால், இந்த தனித்தனி நிகழ்விலும், ஜீவனின் மற்ற பாகங்கள் இணைந்து செயல்பட்டு இருப்பதை அறிவு, மனம், உணர்வு, உடல் என்று அனைத்தும் இணைந்து செயல்பட்டு இருப்பதை உணர முடியும். எல்லா பாகங்களுமே தன்னைப்பற்றிய ஒரு கான்சியஸ் டன் இருப்பதை உணர முடியும்.

சென்ற அத்தியாயத்தில் பார்த்த தூய இருப்பின் பண்பான conscious ஆகவும் இருக்க முடியும். Conscious இல்லாமலும் இருக்க முடியும் என்பதற்கு நடைமுறையில் புரிந்துகொள்ள இந்த உதாரணத்தை கூறுகிறார். அதாவது தூய இருப்பின், சித்தம் தான் அதன் சக்தி தான், அதன் ஆற்றல் தான் இப்படி வேலை செய்கிறது என்பதை தர்க்க ரீதியாக, பகுத்தறிவாக புரிந்து கொண்டால் போதும். எல்லா பொருட்களும் பூமியில் இருந்து வந்தவையே. அவை அனைத்தும் திரும்ப போகப் போவது பூமிக்கே என்பதை ஒத்துக் கொள்கிறோம். அது புலன்களால் வந்தது அல்ல. தர்க்க அறிவு, பகுத்தறிவால் வந்தது . அந்த அளவில் பார்த்தால் கூட ஐம்புலன்களுக்கு புலப்படுபவை மட்டுமே உண்மை என்றும், அப்படி புலப்படாதவை எல்லாம் உண்மை இல்லை என்றோ , இருக்கவில்லை என்றோ , இருக்க முடியாது என்றோ எடுத்துக்கொள்ளாமல், ஐம்புலன்களால் காணமுடியாதவற்றில் தான் அந்த இருப்பின் தாக்கம், சக்தி, ஆற்றல் அதிகமாக இருக்கிறது என்பதை புரிந்து கொண்டால் போதும். அன்னையை கூட கடவுள் என்று நாம் அறிந்த ஒன்றுடன் ஒப்பிட்டுப் பார்த்து, உருவமாகவோ, புலன்களுக்கு ஏற்றவராகவோ இருக்கும் போதுதான் நம்மால் ஏற்றுக்கொள்ள முடிகிறது. என்ன தான் அவர் ஒரு சக்தி, ஆற்றல், பரிணாமத்தை முன்னேற்ற வந்த சக்தி என்றெல்லாம் கூறினாலும் அதன் மூலம் வாழ்வில் ஏதாவது நல்லது நடக்குமா என்பதற்காக, பிறர் சொல்கிறார்கள் என்பதற்காக, ஏற்றுக் கொள்கிறோமே தவிர, அன்னையைப் பற்றிய உண்மைகள், முழுமை நம் சித்தத்தில் ஏறுவதில்லை. இது போன்ற நிலைகளுக்குக் காரணமாக - மகத்- அகங்காரம் என்னும் இரண்டு நிலைகளைக் கூறுகிறார்.

மகத் என்பது பிரபஞ்சத்துவம். சிருஷ்டிக்கும் சக்தி; பகவான் அதை ப்ரம்ம சித்தத்தில் இருந்து எழும் force சக்தி என்கிறார். எதையும் வரையறை இல்லாத infinity ஆக பார்க்கும் போது அது சக்தியாக தெரிகிறது. அகங்காரம் என்பது நம்முடைய வரையறைக்கு உட்பட்டு, புலன்களுக்கு உட்பட்டு, எதையும் பார்க்கும் போது தெரிவது. பிரம்மம் ஆனந்தத்தை அனுபவிக்க பல ஆன்மாக்களாக பிரிந்து சிருஷ்டியில் வந்தபோது தன்னைப்பற்றிய

கான்சியஸ் அதற்கு இருப்பதால் தான் பிரம்மம் என்பது தெரியும் நிலையில் இருப்பதால் அது பெற நினைத்த ஆனந்தத்தை பெற முடியவில்லை. ஒருவேளை தன்னிலிருந்து பிரிந்தால் தனித்தனி ஆன்மாவாக செயல்பட்டால் அதன்பின் ஒருமைக்கு முயன்றால் ஆனந்தம் வரும் என்று நினைத்து அந்த பலனை எதிர் பார்த்த இடத்தில் அகங்காரம் ஏற்பட்டது. இதை அந்த நிலையில் ஞானமும் உள்ள நிலையில் co-ordinating intelligence உயர் சித்தத்தை நோக்கி செயல்களை மையப்படுத்தும் ஆர்வமாக கொள்ளலாம் உதாரணமாக அன்னைக்கு சேவை செய்தால் ஒரு வகை ஆனந்தத்தைப் பெற முடியும் என்பது என் ஐடியா. அதை ஒரு ஸ்தாபனத்தில் செய்தால் அதன் பின் உள்ள மிகப்பெரிய சக்தி உதவும் என்றாலும் கால போக்கில் , ஸ்தாபனத்தின் போக்கில் நான் நினைக்கும் ஆனந்தம் - அதன் மூலம் வராது என்று நினைக்கிறேன் அதே சேவையை தனியாக அந்த ஸ்தாபனத்தில் இருந்து பிரிந்து செய்தால் நான் நினைக்கும் ஆனந்தம் கிடைக்குமா என்று நினைப்பது அகங்காரம். ஸ்தாபனத்தின் பண்புகள் நோக்கத்தோடு என் கான்ஷியஸ் ஒன்றுபட்டு இருந்தால் அதன் சக்தி மகத் எனக்கு பயன் தரும். அதற்கு ஆதரவானது எதிரானது எது என்பதை என் அகங்காரம் முடிவு செய்யும். காரணம் இப்போதைக்கு என் ஞானத்தை பயன்படுத்தி பிரித்தறிய என்னிடம் இருக்கும் ஒரே கருவி அகங்காரம். இந்த இரண்டையும் பேலன்ஸ் செய்ய வேண்டும் அது பற்றி சித்த பூர்வமாக இருக்க வேண்டும் என்றால் எனக்குத் தேவை சத்தியத்தின் நிலையான சமநிலை. ஒரு படைப்பாற்றல் manifesting aspect உள்ள ஒரு சக்தி. அது ஆன்மாவின் சமநிலை செயலில் நிதானம். இவை இரண்டும் இல்லையென்றால் இரண்டு சக்திகளுமே செயல்படாது போல தோற்றமளிக்கும். ஆனால் எப்போதும் இறைவனைப் பற்றிய, தன் மூலத்தை பற்றிய சித்தத்திலேயே இருக்கும் ஆன்மா என்னும் சூட்சம பகுதியில் இவை பட்டு பிரதிபலிக்கும் போது, அதாவது ஆன்மாவின் பண்புகள், அதன் ஆர்வம், அதன் நோக்கம், மகத்திலோ , அகங்காரத்திலோ பட்டு பிரதிபலிக்கும் போது, அதற்கு ஏற்ப நம் சித்தம் மாறுகிறது, உயர்கிறது. அதற்கான சக்தி கிடைக்கிறது. நாமும் பரிணாமத்தில் வளர்கிறோம். அதற்கான உதாரணங்களாக அகந்தையை ஆன்மாவின் பார்வையில் பார்க்க வைப்பது எப்படி என்பது பற்றி Methods of Vedantic Knowledge அத்தியாயத்தைப் பற்றி பேசும்போது தந்திருந்தேன். அதை மீண்டும் இந்தப் பார்வையில் கேட்டால் அதிகம் புரியலாம். பகவான் இந்த அத்தியாயத்தில் தந்திருக்கும் சாங்கிய யோகம் பற்றிய என் புரிதல் இது. இந்த அடிப்படையில் இந்த அத்தியாயத்தை பார்ப்பது, சிந்திப்பது எனக்கு சற்று எளிதாக இருக்கிறது. குறைபாடற்ற வடிவங்களை, செம்மையான உருவங்களை, உருவாக்குவதே இந்த சக்தியின் இலக்கு. இவற்றை கொண்ட

செம்மையான உலகை, அதன் பகுதிகளை, எல்லாவற்றையும் உருவாக்கும் ஒரு விழிப்பான, சித்த பூர்வமான சக்தியே இந்த சக்தி. The purpose of this Force is perfect emergence of its form. இந்த அத்தியாயத்தில் மூன்று முக்கியமான theme-களை அதாவது, குறைபாடற்ற முழு நிறைவான வடிவங்களை உருவாக்குவதே ஆற்றலின் இலக்கு , உலகை அமைக்கும் ஆற்றல் விழிப்பான ஆற்றல். விழிப்பான ஆற்றலே, விழிப்பான மெய்மையின் திறன் - என்னும் மூன்று theme-களை நடைமுறையில் புரிந்துகொள்ள, செயல்படுத்த, இந்த அடிப்படை எனக்கு அதிகமாக உதவுகிறது. பிரம்மம் என்றாலும், பகுத்தறிவாதிகள் கூறும் இயற்கை என்றாலும், அதில் அதீத சக்தி உள்ளது. உருவமில்லாத, வரையறை இல்லாத, ஒன்றிலிருந்து சக்தி, சலனம் தோன்றும் போது ஒரு வடிவமாகவே தோன்றுகிறது. செயலும் அதன் விளைவாக எழுகிறது. இந்த சக்திகள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்ளும்போது வேறொன்று தோன்றுகிறது, என்றாலும் அதுவும் பிரம்மத்தை, பஞ்சபூதத்தை அடிப்படையாகவே கொண்டு இருக்கிறது. கல்லுடன் கல் உராயும் போது நெருப்பு வருவது போல, மேகத்துடன் மேகம் மோதும்போது சப்தம், ஒளி வருவது போல- பிரம்மம் எதனுடன் தொடர்பு கொண்டாலும், அல்லது நாம் பிரம்மத்துடன் தொடர்பு கொண்டாலும் , அதன் அடிப்படை சக்திகளான - Desire Force, Knowledge Force. Action Force என்ற மூன்று அடிப்படைகளும், அதற்கான சக்திகளும் தான் நம் பரிணாமத்திற்கு ஆதாரமாக விளங்குகின்றன. இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியா சக்தி என்று மரபில் நமக்கு சொல்லப்பட்டது பற்றி யாருக்காவது தெரிந்திருந்தால் அதை நீங்கள் பொருத்திக் பார்த்தால் இதை புரிந்து கொள்ளலாம். அதையே நடைமுறையில் நாமும் பிரம்மம்தான் என்னும்போது நம் அறியாமையில் சலனத்தை ஏற்படுத்தி அதன்மூலம் செயல்படும் நிலைக்கு அசைவற்ற நிலை, வரையறைகளில் இருந்து வெளியே வரும்போது, அல்லது வர விரும்பும் போது நம் உள்ளேயே அதற்கான ஆர்வம், ஞானம், சக்தி, திறன் இருப்பதை காணலாம். அதற்கான விழிப்பும், ஞா, திறனும் இருப்பதைக் காணலாம்.

இதை நாம் சித்த பூர்வமாக இருப்பதற்கு இணையாக -நடைமுறைப்படுத்த எடுத்துக்கொள்ளலாம். காரணம் இந்நிலை அன்பர்கள் பெறவேண்டிய ஆன்மீக அனுபவம் என்கிறார் கர்மயோகி. உதாரணமாக Insurance என்பதை ஒரு பிரம்மமாக எடுத்துக் கொண்டால், அதன் நோக்கம், வெளிப்படும் விதம், செயல்படும் விதம், அதற்கான சட்டம், under writing என்று சொல்லப்படும் auditing, risk analysis மற்றும் benefits calculation என்று அதன் பரிமாணங்கள் ஆக இருப்பவை எதுவும் நமக்கு தெரிவதும் இல்லை, புரிவதும் இல்லை. தெரிந்து

கொள்ள விரும்புவதும் இல்லை. நம்மை பொருத்தவரை , இறந்தால் லாபம் அல்லது வியாதி வந்தால் லாபம், விபத்து நடந்தால் லாபம் என்ற அளவிலேயே இருப்போம். ஆனால் எனக்கு தெரிந்த ஒருவர் ஏறத்தாழ நூறு லாரிகள் வைத்திருப்பவர். அந்த வண்டிகளுக்கு சிறுசிறு விபத்துகள் ஏற்படுத்தி claim செய்து depreciation முதல் FC புதுப்பித்தல் வரை அனைத்தையும் அதிலேயே செய்துவிடுவார். பத்து வண்டி வைத்திருந்தவர் எட்டாண்டுகளில் நூறு வண்டி வைத்திருக்கிறார். இது சரியா, தவறா என்பதல்ல கேள்வி. அதன் பின் உள்ள insurance- தத்துவம் புரிய வேண்டியதே முக்கியம். அதாவது பலரின் பாதுகாப்பு, முன்னேற்றம், இழப்பை தவிர்த்தல், என்னும் idea. ஒரு ஸ்தாபனமாக உருவெடுக்கிறது. அது பலரிடமும் premium collect செய்து ஒரு தனிமனிதனுக்கு அது தேவைப்படும் போது அதை தருகிறது. அதாவது பலரின் ஆர்வம் ஒருவரில் கூட வெளிப்பட முடியும். அதன் சட்டங்கள், அதன் நோக்கம் புரிந்து அதனுடன் ஒன்றினால் போதுமானது. இந்த உதாரணம் தவறாக படலாம். ஆனால் அது moral - immoral என்னும் மனிதனின்,சமுதாயத்தின் அபிப்ராயம்.. அதன் சக்தி என்பது Amoral. எந்த வித நல்லது,, கெட்டது, அறியாமை, அறிவு, சரி, தவறு என்பதெல்லாம் பார்க்காமல் தன் நோக்கத்தை வெளிப்படுத்தும் கருவியை மட்டுமே பார்க்கும் சக்தி அது. அது all in each - each in all என்னும் உபநிஷத தத்துவத்தை உள்ளடக்கியது என்பதால் பிரம்மத்தின் செயல்படும் சக்தியை பெறுகிறது. சித் சக்தி அப்படிப்பட்டது. அதன் நோக்கம், idea, ஆனந்தம், சட்டம், போன்றவற்றுடன் ஒன்றுபவர் அனைவருக்கும் அது கிடைக்கும். அதனால் தான் இந்த சித் சக்தியை அன்னை பிறந்த இடம் என்று கூறுகிறார். அவர் விரும்பும் பண்புகளை பின்பற்றும் அன்பர்கள் அல்லாதவர்கள் கூட பெறும் முன்னேற்றம் அதனால் தான் என்கிறார். அந்தக் கோணத்தை அடுத்த கூடலில் பார்க்கலாம்.

இப்போது இந்த ஞானம், இந்த அனுபவம், இந்த புரிதல், அன்பர்களுக்கு வேண்டும் என கர்மயோகி கூறுவதை விளக்குவதற்கு இந்த உதாரணத்தை கூறினேன். இதில் ஆழ்ந்து சிந்தித்தால், அபிப்பிராயங்கள், சுபாவங்கள், அதை ஒட்டி புலன்கள் மூலம் நாம் உணரும் விஷயங்கள் எல்லாவற்றையும் தாண்டி ஒரு இடம், ஒரு சித்தம், ஒரு சூட்சுமம் இருப்பது நமக்கு தெரிய வரும். Halitosis -ஒருவரின் வாய் துர் நாற்றத்தை வைத்தே அவருக்கு இருக்கும் வியாதியை சொல்லிவிடுவார் ஒரு Dentist. அது வெறும் படிப்பில், அனுபவத்தில், புலன்களில் பெற்றது அல்ல. அதை தாண்டி சூட்சமத்தை அறிந்த ஞானம் அது. குருசாமி முதலியார் என்னும் Doctor- ஐ பற்றி கர்மயோகி பல கட்டுரைகளில் எழுதி இருக்கிறார். ஒரு முறை ராஜாஜி

கவர்னருக்கு உடல் நலக் குறைவு என்று பார்க்கச் சென்றபோது அவர் பலவித உடல் உபாதைகளால் அவதிப்பட்டுக் கொண்டு இருப்பது தெரிந்தது. நீங்கள் பார்க்கும் மருத்துவர்கள் இருக்கட்டும். குருசாமி முதலியாரை பாருங்கள். அவர் வியாதியை ஆராய மாட்டார். பார்ப்பார் என்றார். He sees the disease, won't diagnose என்றார். சில நாட்களுக்கு பிறகு கவர்னருக்கு எல்லாம் சரியான போது மீண்டும் வந்து பார்த்தார் . எப்படி என்று கேட்டார் ராஜாஜி. தெரியவில்லை. நீங்கள் சொன்னது போல எதைப் பார்த்தார் என்று தெரியவில்லை. நெஞ்சில் நான்கு தட்டு தட்டினார். ஏதோ மிக்சர் கொடுத்தார். சரியாகி விட்டது என்றார். இதை அனுபவம், படிப்பு, அறிவு என்று எப்படி வேண்டுமென்றாலும் கூறலாம். ஆனால், வாசனை பார்க்கும் திறன், நோயை பார்க்கும் திறன் என்பதெல்லாம் சூட்சுமமாக ஐம்புலன்களின் திறன் என்பது உண்மையானாலும் அதை தாண்டிய ஞானம், உடல், அதன் உறுப்புக்கள். அது செயல்படும் விதம், ஒன்றுக்கொன்று இருக்கும் தொடர்பு, உடல், மனம், உணர்வு ஆகியவற்றுடன் எப்படி பின்னிப்பிணைந்து உள்ளது என்று எல்லா பரிமாணங்களும் புரிந்தால் அது சூட்சும ஞானமாகும். அதாவது ஒரு மனிதனின் முழுமை புரிந்தால் நாமே பிரம்மமாகிறோம். அப்போது நாம் ஏற்படுத்தும் சலனம், movement அனைத்தும் சித் சக்தி, படைப்பாற்றல் கொண்டது. அந்த நிலை புரியவில்லை என்றால் நான் சற்று முன் கூறிய நம் ஞானம் அனைத்தும் பிரம்மத்தின் பிரதிநிதியான ஆன்மாவில் பட்டு எதிரொலித்தால் அதே சக்தி கிடைக்கும் என்பது புரிந்தால் போதும். பல ஆண்டு சேவை, அனுபவம், மனிதர்கள், நோய் என்று பார்த்து பெறுவது மிக குறுகிய காலத்தில் கிடைக்கும். இதை உதாரணமாகச் கொடுத்து இத்தகைய பயிற்சி மூலம் நாம் எல்லாம் அவதாரம் , அல்லது அரவிந்தர் ஆகி விடுவோம் என்று கூறவில்லை. ஆனால் காலத்தை சுருக்கிறோம் என்னும் அளவிற்கு பிரம்மத்தின் சக்தி ஒன்றை, சித்த பூர்வமாக இருப்பதன் மூலம் பெறலாம் என்கிறார் கர்மயோகி.

எனக்கு இந்த ஞானம் இருப்பது தெரிய இருபதாண்டு படிப்பு, அனுபவம், பயிற்சி தேவைப்பட்டது. நம்முடன் பிறந்த ஆன்மாவை அறிய அவ்வளவு சிரமப்படுகிறோம் என்கிறார் கர்மயோகி. அந்த அனுபவங்களை அவர் தற்போது தந்து விட்டதால், நம்மால் அவற்றை நடைமுறை படுத்த முயன்றால், அது ஐந்தாண்டுகளாகவோ , ஐந்து மாதங்களாகவோ கூட மாறலாம். அவரின் இந்த நல்லெண்ணத்தில் உள்ளேயே அதற்கான படைப்பாற்றல் இருக்கிறது. அதை கூட நான் சித் சக்தி என்று கூறுவேன்.

இதை இன்றைய விஞ்ஞானம், நடைமுறை உதாரணத்தில் பொறுத்திப் பார்த்தால் இன்னும் அதிகமாக எனக்கு பிடிபட்டது, மற்றவர்களுக்கும் அப்படி

இருக்குமா என்று தெரியவில்லை என்றாலும் கூறுகிறேன். நமக்குத் தெரிந்த அனைத்து நிலைகளும், நமக்கு சூடு, குளிர் போன்றவற்றை அளக்க, celcious , farenheit என்ற நிலைகளை, அளவைகளை ஏற்றுக் கொண்டு இருக்கிறோம். பெரும்பாலான செயல்களை உடலை, இயந்திரங்களை புரிந்துக் கொள்ள அது போதும். அந்த அளவைகளில் குறை என்று கூறுமளவிற்கு ஒன்றும் கிடையாது. அது விஞ்ஞானமும் ஏற்றுக் கொண்டது தான். இதை, நம் ஞானம், அனுபவம், புலன்கள் அறிவது ஆகியவற்றிக்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அதைத் தாண்டிய, கணிக்க முடியாத, விஞ்ஞானந்த்தை மீறிய விஷயங்களை ஆராய, அதனுடன் ஒன்ற, அதை அறிய, உதாரணமாக, நிலா, செவ்வாய், போன்றவற்றை அறிய , புவி ஈர்ப்பு விசையை நிர்ணயிக்கப்பட formula -க்களை மீற வேண்டிய இடங்களை அளக்க இவை இரண்டையும் உள்ளடக்கிய கெல்வின் என்னும் அளவு. Thermodynamics-ஐ உள்ளடக்கிய அளவு தேவைப்படுகிறது. அது மேலே சொன்ன அனைத்தையும் உள்ளடக்கிய ஞானத்தை, idea -வை கொண்ட ஒரு அளவு, சட்டம். எந்த கருவியையும், எந்த சூழலிலும் முழுமையாக செயல்படுத்த வைக்கும் சக்தியை வெளிப்படுத்துவது.

அது போல அறியாமையில், அபிப்ராயத்தில், சுபாவத்தில் மட்டுமே இருந்தால் நமக்கு சாதாரண திறன்களே போதுமானது. ஆனால் அதைத் தாண்டிய முன்னேற்றம், மனப்பான்மையில், சித்தத்தில், வாழ்வில் வர வேண்டுமென்றால், புலன்களை தாண்டிய சித்தம், சூட்சமம்,, அதன் தொடர்பு, அதன் ஞானம் நமக்குத் தேவை. இத்தகைய சக்திகள் தான் உலகின் இயக்கத்திற்கு காரணமாக இருக்கிறது. ஆனால் அது எப்போது ஏற்பட்டது, சலனமில்லாமல், வரையறை இல்லாமல், இருந்த தூய இருப்பு பரிணாமம், சிருஷ்டி, போன்றவற்றில் இருக்கும் ஆனந்தத்தை அடைய செய்த சலனத்தில் ஏற்பட்டது. அதிலேயே அதற்கான அத்தனை சக்தியும், ஆற்றலும் இருக்கிறது என்பதை சென்ற அத்தியாயத்திலேயே ஏற்றுக் கொண்டு விட்டோம். ஆனால் அந்த சக்தி வெளிவர அது சித்த பூர்வமாக இருக்க வேண்டும். அப்போது தான் அதை சித் சக்தி என்று அழைக்க முடியும் என்பதை புரிந்து கொண்டால் தான் அதை நம்மால் அனுபவப்பூர்வமாக ஐம்புலன்களை தாண்டிய சூட்சம ஞானமாக எடுத்துக் கொள்ள முடியும்.

Business Consultancy செய்யும் ஒரு ஆன்மீக ஸ்தாபனம், பண்புகள் ஆன்மாவைத் தொட்டு வெளிப்படும் போது அது படைப்பாற்றல் கொண்டதாகிறது என்பதை அடிப்படையாகக் கொண்ட consultancy முறை அது. அதன் representative ஒருவர் கம்பனி ஒன்றுக்கு சென்று எங்களால் உங்கள் கம்பெனியின் லாபத்தை இரண்டு மடங்காக்க முடியும் என்றார்.

அதற்கான presentation- ஐ  அவர் தந்த  சற்று நேரத்தில்,  அந்த  கம்பெனியின் CEO  எனக்கு புரிந்து விட்டது,  இரண்டு மடங்கு அல்ல ஆறு மடங்கு ஆக்க முடியும் என்று புரிந்து விட்டது என்று கூறினார்.  அதோடு consultancy-யையும் தொடரவில்லை .  அது ஸ்தாபனத்திற்கு நஷ்டம் என்றாலும் அந்த கம்பெனியின் CEO வின்  சூட்சமத்தை,  உள்ளுரை ஞானத்தை பார்க்கும் ஞானம் வெகுவாகப் பாராட்டப்பட்டது.   சில வருடங்களில் அந்த கம்பெனி பத்து மடங்கு லாபம் சம்பாதிக்க ஆரம்பித்தது.   முழுமையாக சூட்சுமத்தை பார்க்கும் ஞானம் அத்தகைய சக்தியை வெளிப்படுத்தும்.  Life  என்னும் புகழ்பெற்ற பத்திரிகை Editor  ஒருவருக்கு ஒரு வியாதிக்காக pencilin கொடுக்கப்பட்டது.   அதனால் அவருக்கு ஒவ்வாமை ஏற்பட்டதால் அவரின் உறுப்புகள் ஒவ்வொன்றாக பாதிக்கப்பட ஆரம்பித்து இன்னும் சில மணிநேரங்களில் இறந்துவிடுவார் என்னும் நிலைக்குச் சென்றார்.   ஆனால் அவருக்கு  சற்றே மருத்துவ அறிவு இருந்ததால், செல்கள் செயலிழக்கும் முறை பற்றிய ஞானம் இருந்ததால்,  அது பற்றிய  சட்டங்கள் Pencilin செயல்படும் முறைகள் தெரிந்து இருந்ததால், அத்தகைய செயல்பாடுகளை என் செல்கள் இனி ஏற்காது என்று தீர்மானம் செய்து,  அதை அந்த செல்களுக்கு சொல்லிக்கொண்டே இருந்தார்.   ஆச்சரியப்படத்தக்க வகையில் அவன் பிழைத்து எழுந்து தன் அனுபவங்களை அதே Life பத்திரிகையில் எழுதினார்.   அதை அன்னையிடம் காட்டி அவர் கருத்தை கேட்ட போது Supramental Force 1956  முதல் எல்லோரின்  பயன்பாட்டிற்கும் வந்துவிட்டது.  ஆன்மாவின் ஆர்வத்திற்கு, எந்த முழுமையையும் அறியும் ஆர்வத்திற்கு அதனுடன் ஒன்றும் ஆர்வத்திற்கு அது என்றும் உதவும் என்பதற்கு இது அடையாளம் என்றார்.   பெரும்பாலான விஞ்ஞான கண்டுபிடிப்புகள்,  அப்படி வந்தது தான்  என்றார்.

அதாவது நாம் conscious-ஆக இருக்கிறோம் என்னும் இடங்களில் கூட நம்முடைய whole conscious - தன் ஒரு பகுதியை மட்டும் வெளிப்படுத்துகிறது. அதனால் அதைத் தாண்டிய, புலன்களை தாண்டிய,  ஆழ்மன விஷயங்கள், சூட்சும விஷயங்கள், அதை அளக்க  முடியாத, புரிந்துகொள்ள முடியாத, மேல் மன அறிவால் புரிந்து கொள்ள முடியாத -   இதற்கெல்லாம் அப்பாற்பட்ட நுட்பமான ஒன்று நம்முள் இருக்கிறது.  அந்த நுட்பம் பிரம்மத்தின் சலனம் - அதன் சக்தியை உள்ளடக்கியது. அதுதான் நம்மில் உயர்ந்த பகுதியாக, பிரபஞ்சத்தின் , பிரம்மத்தின் தொடர்பில் இருக்கும் பகுதியாக -  அந்த  ஞானத்தை  சித்த பூர்வமாக தன்னுள்  கொண்ட ஒரு பகுதியாக திகழ்கிறது.   அது அந்த ஞானத்தை,  தன் கருத்தை, தான் இந்த சலனத்தை எதற்கு ஏற்படுத்திகிறோம் என்னும் நினைவை, தக்க வைக்கும்

சக்தி  சித் சக்தி.  இந்த அடிப்படை ஞானம் தான் நமக்கு நடைமுறையில் சித் சக்தி பற்றியும்,  அது செயல்படும் விதம் பற்றியும் ஞானத்தை தருகிறது. அப்போது தான் நம்மால் சித்  சக்தி பற்றி புரிந்து அதை நம் ஜீவனில்  ஏற்க முடியும். ஒரு  விஞ்ஞானிக்கு  எப்படி ஒரு விஷயத்தை பற்றி முழு ஞானம், அதன் சட்டம், அதன் இயக்கம்,  அதன் நோக்கம்,  அது மற்ற  இயக்கங்களுடன் தொடர்பு கொள்ளும் விதம்,,  அதன் தாக்கம்,  சூழல் என்று அனைத்தும், அவற்றின் பின்னால் உள்ள சூட்சமம் ஆகியவை புரிந்து, அதனுடன் அவருடைய ஆர்வம்,  ஒரு real idea  வாக , அவர் விரும்பும் ஒரு ஆனந்தத்தின் வெளிப்பாடாக வெளிப்படும் போது, அது ஒரு புது கண்டுபிடிப்பு ஆகிறது. அதாவது அவர் படைப்பாற்றல் பெறுகிறார்.   அதன் பின் உள்ள சக்தி அவரின் சித் சக்தி.  இதை நடைமுறையில் தனி மனித நிலையில் அறிவு, ஞானம் என்ற நிலையில் எப்படி பார்ப்பது.   மேலே சொன்னவற்றை எல்லாம் அனுபவப்பூர்வமாக உணர முடியாவிட்டாலும்,  அறிவு என்னும் அளவிற்காவது அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.  ஏற்றுக்கொண்ட பிறகு நம் ஜீவனின் பகுதிகள்,  அதாவது உடல், உணர்வு, மனம் ஆகியவை எப்போதும் அதைப்பற்றிய விழிப்புடன் இருக்க வேண்டும்.  அது தூய இருப்பு சித்த பூர்வமாக இருப்பதற்கு இணையானது.  அந்த நிலை பிரம்மத்தின் நிலை என்பதால்   ஆனந்தத்திற்கான சித்  சக்தியை உள்ளடக்கியது. அது வெளிப்படும் அத்தனை சலனமும்,  செயல்களும் ஆனந்தத்தை வெளிப்படுத்தும் என்னும் ஞானத்தை பெறுவது.   அது வரையுள்ள மனிதன், வரையறையற்ற பிரம்மத்தை தன்னுள் உணர்வது.   அது உணர்வாகவே நிற்கும் போது அது மாயை என்றாகி விடும்.   அது செயலில், நடத்தையில், மனப்பான்மையில்,  ஆன்மாவில், சித்தத்தில் வெளிப்படும் போது  பிரம்மம் விரும்பிய ஆனந்தத்தை ஒட்டியே படைக்கும் என்பதால்   அதுவே நமக்கு வாழ்வில் ஆனந்தம்.

முன்பு சொன்னது போல நாம் conscious  ஆக  இருக்கிறோம்.  உயர்ந்ததையே, நாமறிந்த உயர்ந்த பண்புகளையே பின்பற்றி  செய்கிறோம் என்றால் எந்த நிலையிலும் அது நம் பகுதியான consious- ஐ  வெளிப்படுத்துகிறது.   அதனால் நாம் பெற நினைக்கும் ஆனந்தத்தை பெற முடியவில்லை.

Entrepreneur- சிலருக்கு புது கண்டுபிடிப்புக்கு உதவுகிறேன் என்று கணிசமான தொகையை செலவு செய்து கொண்டு இருந்தேன். அதில் எனக்கான லாபத்தை பற்றிய திட்டம் எதுவும் இல்லாமல் செய்து கொண்டு இருந்தேன். அது கர்மயோகிக்கு பிடித்தமான ஒரு சேவை என்னும் ஒரே காரணத்திற்காக செய்து கொண்டு இருந்தேன்.  அதிலும் சுயநலமில்லாமல் செய்கிறேனா என்ற பேச்சு எழுந்தது. அத்தகைய life response  வருமளவிற்கு நான் எதுவும்

செய்யவில்லை என்றே தோன்றியது. குழப்பமான தருணத்தில் - Rapid opening - Savitri தரும் அதே பலன் யோக வாழ்க்கை என்னும் புத்தகத்திற்கும் உண்டு என்று கர்மயோகி சொல்லியிருக்கிறார். என்னை பொருத்தவரை Daily Message- உம் , volume-களுக்கும் அது உண்டு. அப்படி ஒரு volume- ஐ திறந்து பார்த்த போது வந்தது - Nature is a conscious force that makes subtle selfishness realise its foly என்று வந்தது. அதாவது என் சுபாவமே ஒரு சித் சக்தி தான். எப்போது என்றால், சூட்சமமாக நாம் வெளிப்படுத்தும் நம் அகந்தைகளை, அதன் பரிமாணங்களை உணர வைக்கும் போது, அது ஒருமைக்கான பிரம்மத்தின் ஞானத்தை தரும்போது. இந்த விஷயத்தில் எல்லாமே நல்லெண்ணம் போல தோன்றினாலும் அதிலும் நான் ஒரு incumbent ஆக இந்திய அரசாங்கத்தின் atal mission -ஆல் நான் பெறப்போகும் பெயர் என் மனதின், என் மனப்பான்மையின், என் சேவையின், என் உதவியின் பின்னால் இருந்தது உண்மையே. அதுவே அப்படி வெளிப்பட்டது என்று புரிந்தவுடன் என்னுடன் co-sponsor செய்த college அதற்கான funding பொறுப்பை தானே ஏற்றுக்கொள்வதாகவும் நான் Mentor- ஆக இருந்தால் போதும் என்று சொன்னது. அது மட்டுமில்லாமல் அந்த product - ஐ develop செய்ய தேவையான அத்தனை உபகரணங்களையும் தங்கள் college- இல் எந்த lab-இல் இருந்தாலும் அனைத்தையும் இலவசமாக எந்த நேரத்திலும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறியது. இப்போது எந்த commitment-டும் இல்லாமல் இருவரின் தேவையையும் நான் உயர்ந்த நிலையில் கவனித்தால் போதும். நான் இந்த சேவையில் கிடைக்கும் என்று நினைத்த ஆனந்தம் கிடைக்கிறது. அதாவது பிரம்மத்தின் சித்த பூர்வமான நிலை புரிந்து, அந்த சித் சக்தி செயல்பட்டு நமக்கு ஆனந்தத்தை தர வேண்டும் என்றால் நம் அறிவு, உணர்வு, மனம், அதற்கு கருவியான ஐம்புலன்கள் என்று எல்லாவற்றையும் தாண்டிய ஒரு சித்தம் நமக்குத் தேவை என்பது புரிந்தது.

இத்தகைய பயிற்சிகள் நமக்கு தேவை அதுவே நம்மை அன்னை விரும்பும் சித்தத்தில் முன்னேற்றம், பரிணாமத்தில் முன்னேற்றம் ஆகியவற்றை தரும். இந்த ஞானத்தை, தத்துவம் முன்னேற்றத்திற்கான சூத்திரம் என்னும் அளவிற்காவது இதை ஏற்றுக்கொண்டு செய்ய வேண்டும் என்று கூறினேன். அதிலும் நாம் ஒரு தவறு செய்கிறோம். முதலில் படித்து புரிந்துகொண்டு செய்ய நினைக்கிறோம். அதிலேயே பெரும்பாலும் நம் தர்க்க அறிவு, பகுத்தறிவு ஆகியவற்றை செலவு செய்கிறோம். ஆனால் தெரிந்ததை வைத்து ஆரம்பித்து அதன் மூலம் பெறும் அனுபவம் அதிக புரிதலை, அதிக கல்வியை கொடுக்கும். Education should follow experience. Attempt to reverse it mostly fail என்கிறார் கர்மயோகி. அதனால் தான் சமர்ப்பணம் முதல் பல

விஷயங்களை மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டே இருக்கிறோம். அல்லது subconscious, subconcient, superconcient, subliminal என்று பெரிய வார்த்தைகளை, நிலைகளை பேசி, அங்கே போய் அவற்றை எப்படி மாற்றுவது என்பதை பேசி, சில பல ஆன்மீக நிலைகளை அடைந்து விட்டதாக, ஞானத்தை பெற்றதாக, புளங்காகிதம் அடைகிறோம். உண்மையில், உணர்வுக்கு புரிந்த, அறிவுக்கு தெரிந்த, மேல்மன அறியாமைகளையே நம்மால் மாற்ற முடியவில்லை என்பதே உண்மை. பகுதியை செம்மைப் படுத்துவது முழுமையை அறிவது. முழுமை பகுதிக்குள் இருக்கிறது. அந்த புரிதல் நம்மை சித்த பூர்வமாக இருக்க வைக்கும். அது அதற்கான சக்தியை வெளிப்படுத்தும். காரணம் கரணங்கள் அத்தனையும், தளங்கள், நிலைகள், அத்தனையும், ஸ்ருஷ்டியிலும், பரிணாமத்திலும் ஆன்மாவுடன் தொடர்பு கொண்டே இருக்கிறது. அது தன் சக்தியை வெளிப்படுத்தி, நம்மை பரிணாமத்தின் பண்புகளுக்குள் கொண்டு வரும்.

அதற்கு கர்மயோகி ஒரு உதாரணம் கூறுகிறார். சந்தோஷத்தை வெளியில் தேடுகிறோம். உள்ளே சந்தோஷம் இருந்தால் வெளியேயும் அது வரும். உதாரணமாக திருமணம் என்பது இன்றைய நிலையில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் marriage is a vanishing institute என்று அன்னை கூறியபடி மாறிக் கொண்டு இருக்கிறது. அது ஒரு உடலின் ஈர்ப்பு, தேவை என்று ஆரம்பித்து, சமூக தேவை, சமூக பாதுகாப்பு என்று ஒரு சடங்காக சென்று கொண்டு இருக்கிறது. நம் கவனம் முழுதும் வெளியில், அதன் பரிமாணங்களை தேடுவதில், புரிந்துக் கொள்வதில், அதை எப்படி நடைமுறை படுத்துவது என்பதில், பிறருடன் ஒப்பீடுகளில் என்று தேடுகிறோம். அல்லது பொருட்களில் தேடுகிறோம். ஆனால் marriage என்பது family என்னும் institution. அதன் அடிப்படை psychological happiness என்று புரியும் போது, உடல், உணர்வு, அறிவு ஆகியவற்றில் இருந்து வெளியே வந்து - ஆன்மீக சக்தியை பெற்று, பிறர் நிலைப் பார்வை, எதிர்வினை ஆற்றாமல் இருப்பது, என்று மாறுகிறது. உண்மையான புரிதல் என்பது நம் அபிப்ராயத்தை ஒட்டிய சிந்தனைகள் நிற்கும் போதே வருகிறது. அது அனுபவமாகும் போது அதன் சட்டங்கள் புரிகிறது.

நம் சித்தத்தை பற்றிய, அதன் முன்னேற்றத்தை பற்றிய நம் விழிப்புணர்வு தான் சித் சக்தியை தர வேண்டும். Awareness of consciousness is conscious force என்கிறார். நம்முடைய உண்மையை உணர்ந்து, சத் புருஷனை உணர்ந்து, அவன் வெளிப்படுத்தும் சக்தியை உணர்வது. When we understand active truth of the Being, we understand static truth of existence என்று கூறுகிறார். அதாவது சத்

தன்னை அறிவதில் சித் ஆகிறது. அது தன்னை அறிவது ஆனந்தத்தை அனுபவிக்க என்பதால் அதை ஏற்படுத்தும் சக்தி சித் சக்தி ஆகிறது.

இதையெல்லாம் புலன்களால் புரிந்து கொள்ள முடியாது உதாரணமாக சப்தங்களில் ஏராளமான நிலைகள் இருக்கிறது. Frequency இருக்கிறது. எல்லாவற்றையும் நம்மால் கேட்க முடியாது. கேட்க வேண்டுமானால் அதற்கான கருவி தேவை. நம்மால் எல்லா நிறங்களையும் பார்க்க முடியாது. பார்க்க வேண்டுமானால், அதற்கான கருவி தேவை. இவற்றை எல்லாம் புலன்கள் பார்க்க முடியாது, கேட்க முடியாது என்னும் போது இன்று technology-ஆல் அதற்கான கருவிகள் வந்துவிட்டன. ஆர்வமுள்ளவர்கள் அதை பார்க்க முடியும், அனுபவிக்க முடியும். அப்படிப்பட்ட ஒரு கருவி, technology கர்மயோகி. எட்டாத உயரத்தில், வானத்தில் எங்கோ இருக்கிறான் என்று நினைத்த பிரம்மத்தை, இறைவனை, உன் உள்ளே தான் இருக்கிறான். அதைப் பார்க்கத் தேவை அதற்கான ஆர்வம் மட்டுமே என்னும் அளவிற்கு எளிமைப்படுத்தி சாதாரண மனிதனுக்கும் கொண்டு சேர்க்கிறது அவரது கட்டுரைகள். அதைப்பற்றிய விழிப்புணர்வு நமக்கு இருந்தால் அது தரும் ஆனந்தத்தை அனுபவிக்க வேண்டும் என்னும் ஆர்வம் இருந்தால் நம்மில் இருந்தும் அத்தகைய சக்தி வெளிப்படும். காரணம் நாம் என்பதும் மனிதன் என்பதும் சிருஷ்டி. சித்சக்தியின் உருவாக்கம் . அது சத்தின் அனைத்து சக்திகளையும் ஆற்றல்களையும் ஒருங்கிணைத்து ஒரு இடத்தில் வைத்து பின்பே சிருஷ்டித்தது என்பதால் அந்த ஆற்றலை நம்மால் பயன்படுத்த முடியும்.

பல நேரங்களில் நமக்கு நாம் ஏன் பிறந்தோம், எதற்காக இருக்கிறோம், நம் இலக்கு என்ன என்னும் கேள்வி வரும். அப்படி வரும் நேரங்களில் நம்மை நாம் கவனித்தால் , நாம் நாமாகவே இல்லை என்பது தெரிய வரும். நமக்கு பின்னால் இருப்பது, நம் உறவுகள், நம் குடும்பம், நம் சமுதாயம். இவை எல்லாம் தான் நம்மை நடத்திக் கொண்டு இருப்பது தெரியும். அவர்களை சந்தோஷப்படுத்தவே, அவர்கள் வழிக்குச் சென்றால் தான் முரண்பாடு இல்லாத வாழ்வு இருக்கும் என்று நினைத்து அனைத்தையும் அதை ஒட்டியே, அதன் சட்டங்களை ஒட்டியே செய்துக் கொண்டு இருப்பது தெரியும். அதை conscious -ஆக உணர்ந்த பின் , அதன் பின்னால் இருப்பதும் பிரம்மமே. அது நம் பின்னாலும் இருக்கிறது என்று நம்ப ஆரம்பித்தால் அதுவே , மக்களை, , சமுதாயத்தை படைத்து நடத்துகிறது என்பதால் அவற்றை விட அதிக சக்தி வாய்ந்தது அது என்பது புரிந்தால் - அதன் சந்தோஷத்திற்கு அதன் சட்டப்படி நடக்க ஆரம்பிபோம். தன் சித்தத்தை சுயநலத்திலிருந்து, குடும்பத்திற்கும் அதன் பிறகு சமுதாயத்திற்கும் என்று விரிவுபடுத்தினால், அதன் வரையறை

எப்படி விரிந்து பரவுகிறது என்பதை கண்கூடாக பார்க்க முடியும். அப்படி என்றால் அதை தாண்டி பிரம்மத்தின் சக்திக்கு உட்படும் போது அது வரையறையற்றதாக இருக்கிறது என்பதையும் உணர முடியும். அந்த உணர்வு வந்தவனுக்கு Life Divine ஒரே நாளில் புரியும் என்கிறார் கர்மயோகி.

இதன் தொடர்ச்சியை அடுத்த கூடலில் கேட்கலாம்.